அலகு

2

# சிந்துவெளி நாகரிகம்

AB3I4C

## கற்றல் நோக்கங்கள்

- சிந்துவெளி மற்றும் ஹரப்பா நாகரிகங்கள் பற்றி அறிதல்.
- சிந்துவெளி நாகரிகத்தின் சமயம் மற்றும் வழிபாட்டு முறையைத் தெரிந்து கொள்ளுதல்.
- சிந்துவெளி மக்களின் வாழ்க்கை முறையினை அறிந்துகொள்ளுதல்
- தமிழர் பண்பாட்டு கூறுகள் சிந்துவெளி மக்களால் பின்பற்றப்பட்டுள்ளதைப் புரிந்துகொள்ளுதல்.
- தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளுதல்.

## நுழைவு வாயில்

தற்கால மனித சமூகம், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, மிக உயரிய வாழ்க்கை நிலையை அடைந்திருக்கிறது. இச்சமூகம் கடந்துவந்த பல்வேறு காலச் சூழல்களை அறிந்துகொள்ள, தொல்லியல் ஆய்வுகள் உதவுகின்றன. அவ்வகையில் சிந்துவெளிப் பகுதியின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு முடிவுகள், சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்தன.

இந்நாகரிகம், உலகில் தோன்றிய சிறந்த நாகரிகங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நாகரிக நகர அமைப்பு, கட்டடக்கலை, சமூகம், சமயம், பொருளாதாரம், வணிகம் ஆகியவற்றில் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதைப் பல அகழ்ழாய்வு சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவில் தோன்றிய பழைமையான நாகரிகம், 'சிந்துவெளி நாகரிகம்'. இந்நாகரிகம், சிந்துநதிக்கரையில் செழித்து வளர்ந்த 'நகர நாகரிகம்' ஆகும். இது, சிந்து ஆற்றங்கரையில் தோன்றி வளர்ந்தமையால் 'சிந்துவெளி நாகரிகம்' என்று அழைக்கப்படுகிறது. இங்கு வாழ்ந்தவர்கள் இந்தியாவின் பழமையான குடிமக்களே என்ற கருத்தொற்றுமை நிலவுகிறது. சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் பழைமையான இந்நகர நாகரிகம், முதன்முதலில் 1921 இல் கண்டறியப்பட்டது. பழைய பஞ்சாபின் மாண்ட்கொமரி மாவட்டத்தில் (பாகிஸ்தான்) ராவி-சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட (1920) தொல்பொருள்சின்னம் 'ஹரப்பா' எனப்படுவதாகும். 1922 ஆம் ஆண்டு, சிந்து மாகாணத்தில் (பாகிஸ்தான்) லர்க்கானா மாவட்டத்தில் எழுபது அடி உயரமுள்ள மண்மேடு ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இச்சின்னத்தை 'மொகஞ்சதாரோ' என்பர்.



**சர் ஜான் மார்ஷல்**

இந்த அகழ்வாய்வினை மேற்கொண்ட தொல்லியலாளர் 'சர் ஜான் மார்ஷல்'. இவர் தொல்பழங்காலத்திலேயே சிறப்புற்று விளங்கிய திராவிட நாகரிகத்துடன் சிந்துவெளி நாகரிகத்தை ஒப்பிடுகிறார். இவரின் கூற்றுப்படி, இந்த நாகரிகம் வேதகாலத்திற்கு முற்பட்டதாக உள்ளது எனவும், இதன் காலம் கி.மு. (பொ.ஆ.மு.) 3250 முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 2750 வரை எனவும் குறிப்பிட்டுள்ளார். இதைப் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.



**லோத்தல் துறைமுகம்**


மேலும் சாகுந்தாரோ, கோட்டிஜி, லோத்தல், காளிபங்கன் போன்ற இடங்களில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழாய்வுகள், தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்குமிடையே தொடர்பு இருப்பதை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் மிகப்பழைமையான நகர நாகரிகம் தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்லியலாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

## சான்றுகள்

மக்கள் பயன்படுத்திய முத்திரைகள், மட்பாண்டங்கள், நீர் அருந்தும் குவளைகள், மோதிரங்கள், சுடுமண் பொம்மைகள், மணிகள், உலோக வளையல்கள், இரத்தினக்கற்கள் மற்றும் கட்டடச் சிதைவுகள் போன்றவை சிந்துவெளி அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவை அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையினை உலகிற்கு அறிவிக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும்

தற்போது தென்கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்த பகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள் தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளி பகுதி) வழக்கத்தில் உள்ளன.




அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள ஆலூர், ஆதூர், படூர், இஞ்சூர், குந்தா, நாகல், தானூர், செஞ்சி போன்ற இடப்பெயர்கள் தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ளன. திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் போன்ற பகுதிகளில்



Unit 2.indd 22 20-02-2020 17:02:56

வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பலுசிஸ்தானில் பிராகுயி என்ற திராவிட மொழி இன்றுவரை பேசப்பட்டு வருகிறது. தமிழ்பிராமி, வட்டெழுத்து மற்றும் வரிவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும் பல இடப்பெயர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற வடமேற்கு நிலப்பகுதிகளில் நிலைத்திருப்பது வியப்புக்குரியது. சிந்துவெளி நாகரிகத்தை விரிவாக ஆய்வு செய்த சர் ஜான் மார்ஷல் ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

## குடிமக்கள்

திராவிடர்கள், மத்தியத் தரைக்கடல் இனத்தினர், முந்தைய ஆஸ்ட்ரோலாய்டுகள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் சிந்துவெளிப்பகுதியில் வாழ்ந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், இந்நாகரிகத்தை தோற்றுவித்த பெருமக்கள் யார் என்பது இன்னும் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. இவர்கள் திராவிடர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பது சர் ஜான் மார்ஷல், ஆர். டி. பானர்ஜீ, ஹீராசு பாதிரியார் போன்றோர்களின் கருத்தாகும். மேலும், சிந்துவெளியில் பேசப்பட்டு வந்த மொழி, பண்டைய தமிழ்மொழியே என்பதும் அவர்களது கருத்தாகும்.

## திராவிடர்கள் யார்?

பண்டைய காலத்தில், தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள்(கிரேக்கர்கள்), இந்நாட்டைத் 'திரிமிளிகே' என்று அழைத்தனர். காஞ்சியை ஆட்சி செய்த நந்திவர்ம பல்லவன் தமிழ் அரசர்களை 'திராவிட மன்னர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளார். கங்காதேவி என்பவர் தாம் எழுதிய 'மதுரா விஜயம்' என்ற நூலில் தமிழ்நாட்டைத் 'திராவிட தேசம்' என்றும், தமிழ் மன்னர்களை 'திரமிள ராஜாக்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். பழங்காலந்தொட்டே 'தமிழ்' என்ற சொல்லைப் பிற மொழியினர் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிந்துவெளி நாகரிகத் தொல்பொருள் ஆய்வை மேலும் விரிவுபடுத்தி அறிவியல் முறைகளையும், தொழில்நுட்பங்களையும் கையாண்ட பிரிட்டானியத் தொல்லியல் அறிஞரான சர். மார்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) அது 'நகர நாகரிகம்' என்பதை உறுதி செய்தார். இது ஆரியர்கள் வருகைக்கு முன்பாகவே வளர்ந்து உச்ச நிலையில் இருந்தது. ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது திராவிடர்கள் சுமேரியா, பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். திராவிடர்களே கலை நயத்திற்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பழக்கப்பட்டிருந்தனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகமானது ஆரிய நாகரிகத்திற்கு முன்பே வளர்ச்சி அடைந்த ஒரு நகர நாகரிகமாகத் திகழ்ந்தது.

### உங்களுக்குத் தெரியுமா?

கீழடி தொல்லியல் களம் என்பது, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு செய்யப்பட்டு வரும் ஒரு சங்க கால வசிப்பிடம் ஆகும். இந்த அகழாய்வு மையம், தமிழ்நாட்டில் மதுரைக்குத் தென்கிழக்கில் 12கி.மீ. தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்ற ஊருக்கு அருகில் அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்துக்கு அடுத்து, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான அகழாய்வு இதுவேயாகும்.

## நகர அமைப்பும் கட்டடங்களும்

சிந்துவெளியில் மையஅரசு இருந்தமைக்கான சான்றுகள் மொகஞ்சதாரோவில் கிடைத்துள்ளன. இதற்குப் பல தூண்களைத் தாங்கும் மன்றம், பொதுக்கூடம் முதலியவை முக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இங்கு

வாழ்ந்த மக்கள், வணிகத்தில் சிறந்து விளங்கினர். மேலும், இவர்கள் பெரும்பொருள் சேர்த்து மாட மாளிகைகளில் வாழ்ந்தனர்.



நகர அமைப்பு

நகரத்தின் தெருக்கள் அகலமாகவும், நேராகவும், சுகாதார வசதி கொண்டனவாகவும் அமைக்கப்பட்டிருந்தன. தெருக்கள் கிழக்கு மேற்காகவும், வடக்குத் தெற்காகவும் அமைந்திருந்தன. பெரிய தெருக்கள் 33 அடி அகலமும், சிறிய தெருக்கள் 9 அடிமுதல் 12 அடிவரை அகலம் கொண்டதாகவும் இருந்தன. பெரிய தெருக்களில் மக்கள் நடந்துசெல்லும் நடைபாதையும் இருந்தது. மூன்று வண்டிகள் ஒரே வரிசையில் செல்லும்வகையில் பெரிய சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அனைத்து வீடுகளிலும் கிணறுகளும், குளியலறைகளும் இருந்தன. அக்குளியலறைகள், கழிவுநீர் செல்வதற்கு ஏற்ற வகையில் தெருவின் அருகிலேயே அமைக்கப்பட்டிருந்தன. இதைப் பார்க்கும்போது, பாபிலோனிய நகரங்களை விஞ்சிய சிறந்த நகரமைப்பைச் சிந்துவெளி மக்கள் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம்.

## கட்டடக்கலை

சிந்துவெளியில் ஹரப்பாவிலும், மொகஞ்சதாரோவிலும் ஊருக்குப் புறத்தே கோட்டைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. அவற்றின் உள்ளே மன்னரின் மாளிகைகளும், பெரிய நீராடும் குளங்களும், நெற்களஞ்சியங்களும் மேடான சாலைகளும் இருந்தன. மேற்குத் திசையில் மேடான நிலத்தில் கோட்டையும், கிழக்கே குடியிருப்புப் பகுதியும் அமைந்திருந்தன.



கட்டடக்கலை

ஒவ்வொரு வீடும் பல அடுக்கு மாடிகளைக் கொண்டதாக இருந்தது. கட்டடங்கள் கட்டுவதற்குச் சுட்டசெங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அச்செங்கற்கள் மிகவும் உறுதியாக இருந்தன. கிணற்றுச்சுவர், சாக்கடைச்சுவர் போன்ற வளைந்த சுவர்களைக் கட்டுவதற்கு ஆப்பு வடிவச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சுவர்களில், செங்கற்களை இணைப்பதற்கு ஒரு வகையான சாந்தைப் பயன்படுத்தி உள்ளனர். பண்டைய தமிழ்மக்கள் பயன்படுத்திய செங்கற்களின் தன்மையும், அளவும் சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய செங்கற்களோடு ஒத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நீச்சல் குளம்

சிந்துவெளியில் கிடைத்துள்ள கட்டடங்களில் தலைசிறந்தது, மொகஞ்சதாரோவிலுள்ள 'பொதுக்குளியல் குளமாகும்'. இக்குளத்திலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், புதிய நீரை உள்ளே கொண்டுவரவும், செங்கற்களால் கட்டப்பட்ட நீர்ப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. குளத்தின் தரைப்பகுதி நீரை உறிஞ்சாமல் இருப்பதற்காக, 'நீலக்கீல்' (Bitumen) என்ற பசையால் பூசப்பட்டிருந்தது. மக்கள், குளித்தபின்பு உடையை மாற்றிக்கொள்வதற்குக் குளத்தின் மேல் ஓரங்களில் பல அறைகள் இருந்தன.



Unit 2.indd 24 20-02-2020 17:02:56



நீச்சல் குளம்

குளத்தைச் சுற்றி நான்கு பக்கமும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. நீச்சல் குளத்திற்குள் சென்றுவர நுழைவாயில்கள் இருந்தன. நீச்சல் குளத்தின் தென்மேற்கு மூலையில் நீராவிப் பயன்பாட்டிற்கு வசதி செய்யப்பட்டிருந்தது.

## தானியக்களஞ்சியம்

சிந்துவெளி மக்களின் முக்கியத்தொழிலாக வேளாண்மை இருந்தது. இவர்கள் எதிர்காலத் தேவையை முன்னிட்டு உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருந்தனர். இதற்கு ஹரப்பாவில் இருக்கும் தானியக்களஞ்சியமே சான்றாகும். இது 168 அடி நீளமும், 135 அடி அகலமும் உடையது. இதன் சுவர்கள் 52 அடி உயரமும், 9 அடி கனமும் உடையவை. இவை இரண்டு வரிசைகளாகக் கட்டப்பட்டு இருந்தன. இவ்விரண்டு வரிசைகளுக்கிடையே உள்ள தூரம் 23 அடியாகும். இவ்விரு நெடுஞ்சுவர்களுள் ஒவ்வொரு வரிசையிலும் ஆறு மண்டபங்கள் இருந்தன. ஒவ்வொரு மண்டபத்திலும் மூன்று பெருஞ்சுவர்கள் எழுப்பப்பட்டன. அதில் நான்கு அறைகள் இருந்தன. இம்மண்டபத்தின் தரைப்பகுதி மரப்பலகையால் ஆனது. பல அறைகள் கொண்ட இத்தானியக்களஞ்சியத்தில் உணவு தானியங்கள் மட்டுமே சேமிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



தானியக்களஞ்சியம்

## சமுதாய நிலை

சிந்துவெளியில் பல்வேறு தொழில் செய்வோர் இருந்தனர். அவர்களுள், கட்டடம் கட்டுவோர், நெசவாளர், சிற்பி, ஓவியர், தட்டார், தச்சர் முதலிய கைவினைஞர்கள் இருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வீட்டு வேலைக்காரர்கள், கூடை முடைவோர், விவசாயம் செய்வோர், மீன் பிடிப்போர் இங்கு வாழ்ந்துள்ளனர். மேலும், சிந்துவெளி மக்கள் விவசாயம் மற்றும் வாணிகம் செய்து வசதியுடன் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

## பெண்களின் நிலை

சிந்துவெளியில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்பட்டனர். இவர்கள், அழகு சாதனப்பொருள்களைப் பயன்படுத்தினர். அதற்குச் சான்றாக வெண்கலத்தால் ஆன முகம் பார்க்கும் கண்ணாடிகள், தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள் போன்ற பொருள்கள் இங்கு கிடைத்துள்ளன. மேலும், இப்பெண்கள் காதணி, கைவளையல், மோதிரம், காலில் காப்பு, கழுத்தில் அட்டிகை, கழுத்துமணிகள் போன்ற பல அணிகலன்களையும் அணிந்திருந்தனர்.







Unit 2.indd 25 20-02-2020 17:03:00



**அணிகலன்கள்**

இவையனைத்தும் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களால் செய்யப்பட்டிருந்தன. சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மேற்கூறிய அணிகலன்களைத் தொன்றுதொட்டுத் தமிழகப் பெண்கள் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவை, சிந்துவெளி மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன.

## உணவு வகைகள்

சிந்துவெளி மக்கள் சிறந்த நகர வாழ்க்கையை மேற்கொண்டனர். நகரத்தில் அரசனும், அதிகாரிகளும், பலவகைத் தொழிலாளர்களும், கலைஞர்களும் வாழ்ந்தனர். கோதுமை, பார்லி, பேரீச்சம்பழம், பால், இறைச்சி வகைகளை மக்கள் உண்டனர். நீர்வளம் மிக்க சிந்துவெளியில் தானிய வகைகளும், பட்டாணி முதலிய பருப்பு வகைகளும், முலாம்பழம் முதலிய பழ வகைகளும், ஆடைக்கேற்ற பருத்தி வகைகளும் பயிராயின. ஆடு, மாடு, பன்றி முதலிய விலங்குகளின் இறைச்சியும், ஆமை, மீன் முதலியனவும் அவர்களுக்குக் கிடைத்தன. எஞ்சிய உணவுத் தானியங்களையும், இறைச்சி வகைகளையும் பதப்படுத்தி வைத்து அவர்கள் உண்டனர். இங்குக் கிடைத்துள்ள மாவு அரைக்கும் இயந்திரங்கள் அம்மி, ஆட்டுக்கல், உரல், எண்ணெய்ச் சட்டி, இட்டிலிச் சட்டி மற்றும் பிற பொருள்களையும் கொண்டு இவர்களின் உணவு வகைகளை நம்மால் அறிய முடிகிறது. இவர்கள் மரப்பலகை, மண்சிப்பி, வெண்கலக்கிண்ணி போன்றவற்றை உண்கலங்களாகப் பயன்படுத்தினர் என்பதை அறிய முடிகிறது.

## உடைகள்

சிந்துவெளி மக்கள் பருத்தி, கம்பளி, நார்ப்பட்டு ஆகியவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். மேலாடை, கீழாடை என முழு ஆடைகளையே அணிந்தனர். பருத்தி ஆடைகள் பெரும்பாலும் வண்ணங்களுடனும் பூ வேலைப்பாடுகளுடனும் இருந்தன. கம்பளி ஆடைகள் தடித்திருந்தன. நார்ப்பட்டாடை உடலோடு ஒட்டி, ஒளி ஊடுருவுமாறு இருந்தது. கழுத்துப் பட்டையுடைய சட்டைகளையும், பொத்தான் தைத்த சட்டைகளையும் இவர்கள் அணிந்திருந்தனர்.

ஆண், பெண் இருபாலரும் மங்கோலியரைப் போல் தலையில் முண்டாசுக் கட்டிக்கொண்டனர். வட்டுடை அணிந்தவருமுண்டு. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஆண், பெண் உருவங்களைக்கொண்டே நாம் அவர்கள் அணிந்திருந்த ஆடை அணிகலன்களைப்பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

## நகர நாகரிகம்

சிந்துவெளி நாகரிகத்தில் நகர வாழ்க்கையின் பல்வேறு கூறுகள் பொதிந்துள்ளன. ஷில்டே என்ற அறிஞர் நகர வாழ்க்கையின் கூறுகளாக, அதிக மக்கள் தொகை, பல்வேறு தொழில் புரிவோர், வணிகர்கள், பணியாளர்கள், குடியிருப்புகள், பொதுக்கட்டடங்கள், எழுத்துக்குறியீடுகள், கலை வடிவங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார். நகரில் வணிகர்கள் பெருவாரியாக வாழ்ந்தனர். நகரங்களுக்கு இடையேயான உள்நாட்டு வணிகமும், வெளிநாட்டு வணிகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இந்நகரங்கள் பல தொழில்களின் மையங்களாக இருந்தமையால், ஏற்றுமதிக்கான பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இங்குப் பல நகரங்களில், நகராட்சிமுறை பயன்பாட்டில் இருந்தது. இதிலிருந்து, மையஅரசு இருந்திருக்க வேண்டும் எனத் தெளிவாகிறது. மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில், சிந்துவெளி நாகரிகம் 'நகர நாகரிகம்' என்பதும் புலனாகிறது.



Unit 2.indd 26 20-02-2020 17:03:01

## பொழுதுபோக்கு

மொகஞ்சதாரோவில் கிடைக்கப் பெற்ற விளையாட்டுப் பொருள்களில், கோலிகளே அதிகமாகக் கிடைத்துள்ளன. பகடைக்காய், சொக்கட்டான், சதுரங்கம் ஆடுவது அவர்களுடைய சாதாரண பொழுதுபோக்காகும். சதுரங்க அட்டை மரத்தாலும், சதுரங்கக்காய்கள் களிமண்ணாலும் செய்யப்பட்டு இருந்தன. சிறுவர்கள், களிமண்ணில் பொம்மைகள் செய்து விளையாடினர்.



**சுடுமண் விளையாட்டு பொம்மைகள்**

இத்தகைய விளையாட்டுகள், தொன்றுதொட்டுத் தமிழகத்திலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆகவே, சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறியலாம். மேலும், சிந்துவெளி மக்கள் இசையிலும், நாட்டியத்திலும் அதிக ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். இவர்கள் காளைச்சண்டை, கோழிச்சண்டை, வேட்டையாடுதல், பறவைவளர்ப்பு போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். கோழிச்சண்டை விளையாட்டு, தமிழகப் பண்பாட்டிலிருந்து சிந்துவெளி மக்களின் பண்பாட்டிற்குப் பரவியுள்ளதை காணலாம்.

## மருத்துவம்

சிந்துவெளி மக்கள் கண், காது, தொண்டை, தோல் தொடர்பான நோய்களுக்குப் பயன்படுத்தும் மருந்துகளைச் செய்வதற்குக் கட்டில் (cuttle) என்ற ஒரு வகையான மீனின் எலும்புகளைப் பயன்படுத்தினர். மான், காண்டாமிருகத்தின் எலும்புகள், பவளங்கள், வேப்பந்தழைகள் போன்றவை மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தமிழகத்தில், இன்றும் மருத்துவத்திற்கு வேப்பந்தழை பயன்படுவது குறிப்பிடத்தக்கது.

## இறந்த உடலை அடக்கம் செய்தல்

சிந்துவெளி மக்கள் இறந்த உடலை அடக்கம் செய்வதில் மூன்று வகையான வழிமுறைகளைப் பின்பற்றினர். முதலாவதாக, முழு உடலையும் புதைப்பது. இரண்டாவதாக, எரிந்த உடலின் எஞ்சிய பாகங்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருள்களையும் சேர்த்து தாழிகளில் வைத்துப் புதைப்பது. இத்தாழிகள், வீடுகளிலோ வீட்டின் அருகிலோ புதைக்கப்பட்டன. இறுதியாக, இறந்த உடல்களை ஊருக்குப் புறத்தே திறந்த வெளியில் பறவைகளும், விலங்குகளும் உண்ணும்படி வைத்தனர். எஞ்சிய எலும்புகளை மட்டும் எடுத்துப் பின்னர், மண்தாழிகளில் வைத்து அவற்றுடன் வேறு குடுவைகளில் இறந்தவர் பயன்படுத்திய சில பொருள்களையும் சேர்த்துப் புதைத்தனர். இறந்த உடலை புதைக்கும்போது, அவர்களுக்குப் பிடித்த உணவுப்பொருள்களை வைத்து புதைப்பதும் வழக்கத்தில் இருந்தது. இப்பழக்கம், தமிழகத்தின் பெரும்பகுதிகளில் வழக்கத்தில் இருந்தது என்பது, பல ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற தாழிகள் அத்திரப்பாக்கம், அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், திருகாம்புலியூர், தாமிரபரணி ஆற்றங்கரை போன்ற பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழகத்தின் வடக்கிலும், தக்காணத்தின் தெற்கிலும் இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவை, தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி மக்களுக்கும் உள்ள தொடர்பினை உறுதி செய்கின்றன.

இறந்தவர்களை வடக்கு தெற்காகப் புதைக்கும் வழக்கம் சிந்துவெளிக்கும் பண்டைய தமிழகத்திற்கும் பொதுவான நடைமுறையாக இருந்தது. உருண்டை வடிவம் கொண்ட (Globular) ஈமத்தாழிகள், சிந்துவெளியிலும் தமிழகத்திலும் பயன்படுத்தப்பட்டன. இன அடிப்படையிலும் தொழில்நுட்ப அடிப்படையிலும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் தமிழகப் பண்பாட்டிற்கும் இருந்த தொடர்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.



Unit 2.indd 27 20-02-2020 17:03:01

### பொருளாதார வாழ்க்கை முறை

சிந்துவெளி நாகரிகம் ஆற்றங்கரையில் தோன்றியதால், அங்குள்ள மக்கள் நீர்வழிப்பயணம் மேற்கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திலும் ஈடுபட்டனர். இவர்கள் உள்நாட்டில் காஷ்மீர், மைசூர், நீலகிரிமலை, கிழக்கு இந்தியா, மேற்கு ஆசியா, மத்திய ஆசியா ஆகிய பகுதிகளில் வணிகம் செய்தனர். மேலும், இவர்கள் சுமேரியா, எகிப்து போன்ற வெளிநாடுகளிலும் வணிகத்தில் ஈடுபட்டுப் பொருளீட்டிச் சிறப்பாக வாழ்ந்தனர் என அறிய முடிகிறது.

### விவசாயம்

சிந்துவெளி மக்களின் முதன்மைத் தொழிலாக வேளாண்மை இருந்தது. இவர்கள் கோதுமை, பார்லி, நெல், எள், காய்கறிகள் போன்ற பயிர்களைப் பயிரிட்டனர். இவர்களுக்கு உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும் பழக்கமும் இருந்தது. அதற்குச் சிறந்த உதாரணமாக 'தானியக்களஞ்சியம்' திகழ்கிறது. அகழ்வாராய்ச்சியின் போது சிதைந்து கிடந்த பல கால்வாய்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வசதியும் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. இவர்கள், நிலத்தை இரு வழியாக உழுததற்கான அடையாளங்கள் காளிபங்கனில் காணப்படுகின்றன. வேளாண்மைக்குத் திமிலுடன் இருக்கும் காளைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், ஒட்டகங்களும் எருமைகளும், வேளாண்மைக்குப் பயன்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான நீர், சிந்துநதியிலிருந்து பெறப்பட்டது. அகழ்வாய்வின்போது, கண்டெடுக்கப்பட்ட கலப்பைகளும், அரிவாள்களும் சிந்துவெளி மக்கள் வேளாண்மையில் சிறந்து விளங்கினர் என்பதை வெளிப்படுத்துகிறது.

### வீட்டுவிலங்குகள்

சிந்துவெளி மக்களிடையே கால்நடை வளர்ப்பு மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அவர்கள் தமது வீடுகளில் பசு, செம்மறியாடு, வெள்ளாடு, எருமை, எருது, நாய், பன்றி, ஒட்டகம் போன்ற விலங்குகளை வளர்த்து வந்தனர். இதனால், இவர்களின் பொருளாதாரம் மேம்பட்டது. வீட்டைப் பாதுகாக்கவும், வேட்டைக்காகவும் நாயை பயன்படுத்தினர். மேலும் பூனை, மான், மயில், வாத்து, கிளி போன்றவற்றையும் வளர்த்தனர். ஆனால், இவர்கள் குதிரையை அறிந்திருந்தார்களா என்பதுபற்றி இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை.

### வேட்டையாடுதல்

சிந்துவெளி மக்கள் பொழுது போக்குக்காக மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தேவைக்காகவும் வேட்டையாடுவதில் ஈடுபட்டனர். அவர்கள் யானை, காண்டாமிருகம், கரடி, மான், சிறுத்தை போன்ற விலங்குகளை வேட்டையாடியதாகச் சான்றுகள் மூலம் அறிகிறோம்.

மேற்கண்ட விலங்குகளின் உருவங்கள் பொறித்த பல முத்திரைகள் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள், விலங்குகளின் தோல், முடி, எலும்பு ஆகியவற்றை விற்று வணிகம் செய்தனர். வேட்டைக்குக் கோடரி, ஈட்டி, குத்துவாள், மழு, தண்டு, கவண், அம்பு, வில், போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர். இவை, செம்பாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்டிருந்தன.

### உலோகங்களும் தாதுப் பொருள்களும்

சிந்துவெளி மக்கள் தங்கம், பித்தளை, வெள்ளி போன்ற உலோகங்களைப் பயன்படுத்தினர். பெரும்பாலான உலோகப் பொருள்கள் செம்பு மற்றும் வெண்கலத்தால் செய்யப்பட்டவை என்பது அகழாய்வின் மூலம் தெரிகிறது. போர்க்கருவிகள் செய்வது, இவர்களின் முதன்மைத்தொழிலாகும்.



**சிந்துவெளி மக்களின் கருவிகள்**



Unit 2.indd 28 20-02-2020 17:03:01

கோடரி, ஈட்டி, வில், அம்பு, கதாயுதம், கவண், கத்தி போன்ற ஆயுதங்களைப் போரில் பயன்படுத்தினர். ஈட்டிமுனை மிகக்கூர்மையானதாகவும், அகலமானதாகவும் இருந்தது. சில வகையான கத்திகள் இருபக்கமும் நன்கு தீட்டப்பட்டிருந்தன. வீடுகளுக்குத் தேவையான பாத்திரங்கள் மண், கற்கள், தந்தம், செம்பு, பித்தளை ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தன. ஆனாலும், இவர்கள் இரும்பின் பயனை அறிந்திருக்கவில்லை.

### வணிகம்

பொதுவாக ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் வணிக மையங்களாக இருந்தன. உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திற்கு நிலவழி மற்றும் நீர்வழிப் போக்குவரத்தைப் பயன்படுத்தினர். வணிகம் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. சிந்துவெளி மக்கள் வணிகத்திற்காக மற்ற இடங்களுக்குச் சென்று வர மாட்டுவண்டியை அதிகமாகப் பயன்படுத்தினர்.

தென்பாரசீகம், ஈராக், சுமேரியா, சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுடன் தரைவழி வணிகம் செய்யும் பொருட்டு, ஏறத்தாழ 3000-கல் தொலைவுவரை பயணம் மேற்கொண்டதாக அறிய முடிகிறது. தரைவழிப் போக்குவரத்திற்கு எருதுகளே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், நீர்வழிப் போக்குவரத்தும் வழக்கத்திலிருந்தது. அது சிந்துஆற்றின் வழியே நடைபெற்றது. பண்டைய சிந்துவெளி மக்கள் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு, பல நாடுகளுடன் வணிகம் செய்தனர். படகுப் போக்குவரத்தின் மூலம் உள்நாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக, புரோச், காம்பே துறைமுகங்கள் வணிகத்தில் சிறப்புற்று இருந்தன என்பதை அறிய முடிகிறது.

### அளவீடுகள்

சிந்துவெளி மக்கள் வணிகத்தில் ஒரே சீரான எடைக்கற்களையும் அளவீடுகளையும் பயன்படுத்தினர். 'ஹரப்பா' மக்கள் அளக்கும் கலையை அறிந்திருந்தனர். நீளத்தை அளக்க அடிமுறையைப் பயன்படுத்தினர். அதற்குச் சான்றாக, அளவைக் குறிகள் இடப்பட்ட குச்சிகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் நீளத்தை அளக்க அடி முறையானது தொன்றுதொட்டு வழக்கத்தில் இருப்பதை நாம் அறிய முடிகிறது. இவர்கள் நிலத்தை அளக்க வெண்கல அளவுகோலைப் பயன்படுத்தி உள்ளனர். இதிலிருந்து, சிந்துவெளி மக்கள் அளக்கப் பயன்படுத்திய அளவீட்டு முறைக்கும் தமிழர்கள் பயன்படுத்தும் அளவீட்டு முறைக்கும் தொடர்பு இருப்பதை நாம் அறியலாம்.

### சமயம் மற்றும் வழிபாடு

சிந்துவெளி மக்கள், சமய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அங்குக் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் காணப்படும் உருவங்கள், வடிவங்களைக் கொண்டு அவர்களின் சமயத்தைப்பற்றி அறிய முடிகிறது. இவர்கள் இயற்கைப் படைப்பாற்றலின் உருவமாகப் பெண்களைக் கருதி, அவர்களைத் தெய்வமாக வழிபட்டனர்.

### தாய்த்தெய்வ வழிபாடு

தாய்த்தெய்வ வழிபாடு, சிந்துவெளி மக்களின் முக்கிய வழிபாடாகும். ஹரப்பாவில் பெண் உருவம் பொறித்த பல முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



**தாய்த்தெய்வ வழிபாடு**

இதுவே, பிறகு சக்தி வழிபாடாக மாறியது. இன்றும், தமிழகத்தில் பெண்களைத் தெய்வமாக வழிபடும் மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



Unit 2.indd 29 20-02-2020 17:03:02

(எகா) பார்வதி, காளி போன்ற தெய்வங்கள் தமிழகத்தில் இன்றும் வணங்கப்படுவதைக் காணலாம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

பண்டைய திராவிட மக்களுள் பெரும் பகுதியினர், தாய்த்தெய்வ உரிமை, தாய் முறை போன்றவற்றைக் கடைப்பிடித்தனர். இவற்றின் காரணமாக திராவிட மக்களிடையே பெண் தெய்வ வழிபாடு பெருவழக்காக இருந்தது என சமூகவியல் அறிஞர்கள் கூறுவர்.

## பசுபதி வழிபாடு

ஹரப்பாவில் கிடைத்த முத்திரைகளில் அமர்ந்த நிலையிலுள்ள மகாயோகியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் மூன்று முகங்களை கொண்ட கடவுள், யோக நிலையில் அமர்ந்திருப்பது போலவும், அதனைச்சுற்றி யானை, புலி ஆகியவற்றின் உருவங்கள் வலப்புறமாகவும், காண்டாமிருகம், எருமை ஆகியவற்றின் உருவங்கள் இடப்புறமாகவும் அமைந்துள்ளன.



**பசுபதி வழிபாடு**

வரலாற்று ஆய்வாளர்கள் கூற்றுப்படி, இது சிவனுக்குரிய "திருமுகம்" (மூன்றுமுகம்), பசுபதி(விலங்குகளின் கடவுள்), யோகேசுவரன் (யோகிகளின் கடவுள்) போன்ற பல்வேறு வடிவங்களை உணர்த்துவதாக இவ்வழிபாடுகள் உள்ளன.

## விலங்கு வழிபாடு

சிந்துவெளி மக்கள் விலங்குகளைத் தெய்வமாக வழிபட்டனர். தமிழகப் பண்பாட்டில் பண்டைய காலம் முதல் இன்றுவரை பசு, எருது, புலி, பறவை போன்ற விலங்குகள் சமயச் சின்னங்களாக இருந்து வருவதைக் காணலாம். இது சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிடப் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

## நீர் வழிபாடு

ஹரப்பா, மொகஞ்சதாரோ நகர மக்கள் ஆற்றங்கரையின் அருகிலேயே வசித்ததன் காரணமாக, நீரைக் கடவுளாகக் கருதி வழிபட்டனர். இவர்கள், மொகஞ்சதாரோவில் உள்ள பெரிய நீச்சல் குளத்தில் நீராடுதல் என்ற வழக்கம் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இங்கு வாயில் சிறுமீன்களை வைத்துள்ள முதலைகள், ஆமை போன்ற உருவங்கள் ஆறுகளுடன் சேர்த்துப் பொறிக்கப்பட்டுள்ளதை முத்திரைகள் மூலம் காணமுடிகிறது. ஆகவே, சிந்துவெளி மக்கள் ஆற்றுவணக்கம் (அ) ஆற்றுவழிபாடு செய்து வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. தமிழகத்தில் வழிபடுவதற்கு முன் நீராடும் வழக்கம் இருப்பதை இன்றும் காணலாம். மேலும், நீர்நிலைகளைத் தெய்வமாக வணங்குவதும் தமிழர்களிடையே உள்ள பண்பாடாகும்.

## மர வழிபாடு

சிந்துவெளி மக்களிடம் மரங்களை வழிபடும் வழக்கமும் இருந்தது என்பதை ஹரப்பா, மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளின் வாயிலாக அறியலாம். இவற்றில், அரசமரமே முதன்மையாக உள்ளது. மரத்தடியில் மேடை அமைத்தலும் விழாக்கள் நடத்துதலும் வழக்கமாகும். மரங்களை ஆண் கடவுளாகவும், பெண் கடவுளாகவும் கருதி வழிபட்டனர். இன்றும், தமிழகத்தின் வழிபாட்டுத் தலங்களில் வேப்பமரத்தை பெண் கடவுளாகவும், அரசமரத்தை ஆண் கடவுளாகவும் வணங்குவது வழக்கமாகவுள்ளது.




Unit 2.indd 30 20-02-2020 17:03:02

## சூரியன் மற்றும் நெருப்பு வழிபாடு

சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் சூரியன், பாம்பு உருவங்கள் காணப்படுகின்றன. ஆகவே, இவர்கள் சூரியனையும் நெருப்பையும் கடவுளாகக் கருதிவழிபட்டனர் எனலாம். இன்றும், தமிழகத்தில் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றான திருவண்ணாமலை அக்னித்தலமாகவும்(நெருப்பு), சிவனின் வடிவமாகவும் வணங்கப்படுகிறது. மேலும், சிந்துவெளி மக்களிடையே காணப்படும் பாம்பு வழிபாடு, லிங்க வழிபாடு போன்றவை தமிழகப் பண்பாட்டோடு பொருந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கலைகள்

சிந்துவெளி மக்கள் நுண்கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் பயன்படுத்திய முத்திரைகளில் காணப்படும் உருவங்கள், பானைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள், சுடுமண் பொம்மைகள், அணிகலன்கள், வெண்கலத்தாலான நடனப்பெண்ணின் உருவம், யோகி சிற்பம் ஆகியவை சிந்துவெளி மக்களின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.



**நடன மாதுவின் சிலை**

## எழுத்துகள்

சிந்துவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள 'சித்திர எழுத்துகள்' சிந்துவெளி மக்களின் மொழிக்குரிய எழுத்துகளாகும். இந்த எழுத்துகள் இடமிருந்து வலமாக ஒரு வரியும், வலமிருந்து இடமாக மற்றொரு வரியாகவும் எழுதப்பட்டுள்ளன. தமிழகத்தின் கீழ்வாலை, குளிர்சுனை, புறக்கல், ஆலம்பாடி, செத்தவாரை, நேகனூர்பட்டி ஆகிய இடங்களில் காணப்படும் எழுத்துகள், சிந்துவெளியிலுள்ள எழுத்துகளோடு தொடர்புடைய தொல்தமிழ் எழுத்துகளாகும். வடபிராமி எழுத்துகளும், தென்பிராமி எழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளிலிருந்து வளர்ச்சி பெற்றவையாகும்.

### உங்களுக்குத் தெரியுமா?


**சிந்துவெளி எழுத்துக்கள்**

சிந்துவெளி நாகரிக மக்களின் பேச்சு மொழி, எழுத்துக்கள் தொடர்பாக இன்றும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிந்துவெளி எழுத்துக்களுக்கும், திராவிட எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று ஹீராசு பாதிரியார், ஐராவதம் மகாதேவன், பாலகிருஷ்ணன் போன்ற வரலாற்றாய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

தென்பிராமி எழுத்துகள், சிந்துவெளி எழுத்துகளிலிருந்து திராவிடரால் வளர்க்கப்பட்ட நேரான வளர்ச்சியுடைய எழுத்துகள் ஆகும். அவற்றின் ஒருமைப்பாட்டைத் திருநெல்வேலியில் கிடைத்த மட்பாண்டங்கள் மீதுள்ள எழுத்துக்குறிகளையும், நீலகிரியில் உள்ள கல்வெட்டுகளையும் கொண்டு அறியலாம். சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட மொழி, திராவிட மொழி என்பதும், தமிழ் ஒரு தென் திராவிட மொழி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Unit 2.indd 31 20-02-2020 17:03:02



**சிந்துவெளி எழுத்துகள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

உலக மொழிகள் எவற்றிலும் இல்லாத சிறப்பு தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. எழுத்துகளின் ஒலிப்பு முறையான ழ,ன,ள,ற,ண ஆகிய எழுத்துகள் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுகின்றன.

## முத்திரைகள்

சிந்துவெளி மக்களின் பண்பாட்டில் மிகச் சிறந்த கலைபடைப்புகளாகத் திகழ்வன முத்திரைகளாகும். அகழ்வாராய்ச்சியில், சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை திமிலுடன் இருக்கும் காளை, எருமை, புலி, காண்டாமிருகம், வெள்ளாடு, யானை போன்ற விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகளாகும். பல முத்திரைகள் எழுத்துக்குறியீடுகளைக் கொண்டுள்ளன. ஆகவே, இவை சிந்துவெளி மக்களின் வரலாற்றை அறிய உதவும் இன்றியமையாத சான்றுகளாகத் திகழ்கின்றன.

## சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு

சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு குறித்தும், அதற்கான சான்றுகள் குறித்தும் வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லை. இதுசார்ந்த பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வளவு பெரிய, வளர்ந்த, பண்பட்ட நகர நாகரிகமானது, திடீரென அழிந்திருக்க முடியாது. இருந்தாலும், இது பின்வரும் காரணங்களால் அழிந்திருக்கக் கூடும் எனக் கருதுகின்றனர்.



**சிந்துவெளி முத்திரைகள்**

- சிந்துவெளி நாகரிகம் ஆற்றங்கரையில் அமைந்துள்ளதால், வெள்ளப் பெருக்கினால் அழிந்திருக்கலாம்.
- அங்குக் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் அடிப்படையில் பார்த்தால் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டு அழிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.
- வரலாற்று ஆசிரியர் கிருஷ்ணா ரெட்டி என்பாரின் கூற்றுப்படி ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு நகரங்கள் மிகப்பெரிய வணிகத்தலங்களாக இருந்துள்ளன. இங்குப் பொருளாதார தேக்கநிலை ஏற்பட்டு, நகரங்களை விட்டு மக்கள் வெளியேறி இருக்கலாம்.
- சிந்துநதி தன்போக்கை மாற்றிக் கொண்டதால், கடுமையான வறட்சி ஏற்பட்டு மக்கள் அந்நகரங்களிலிருந்து வெளியேறி இருக்கலாம்.
- மொகஞ்சதரோவில் கிடைத்துள்ள மண்டை ஓடுகளில் காணப்பட்டுள்ள வெட்டுக்

காயங்களின் அடிப்படையிலும் பெரும்பான்மையினரின் கருத்துப்படி, ஆரியர் படையெடுப்பினால் இந்நாகரிகம் முற்றிலும் அழிந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

## இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை

பழைமையும் பெருமையும் வாய்ந்த சிந்துவெளி நாகரிகம், இந்திய பண்பாட்டிற்குப் பின்வரும் கொடைகளை வழங்கியுள்ளது அவையாவன;

- சிந்துவெளி காலத்தில் தோன்றிய நகரங்களின் வடிவமைப்பு மேம்பட்டதாகவும் மற்ற நகர வடிவமைப்பிற்கு முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளது.
- கட்டடக் கலையில் சுட்ட செங்கற்கள், சுண்ணாம்பைப் பயன்படுத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர்.
- நகரம் மாசடைவதைத் தடுக்க சுண்ணாம்புக் கால்வாய்கள், நகரின் ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டிருந்தன.
- தூய்மை மற்றும் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்பட்டது.
- கவின்கலைகள் நன்கு ஊக்குவிக்கப்பட்டன.
- சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மொழியே தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது.

### உங்களுக்குத் தெரியுமா?

**சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த இடங்கள்**

- ஹரப்பா – ராவி நதியோரம் மேற்கு வங்காளம் (தற்போதைய பாகிஸ்தான்)
- மொகஞ்சதாரோ – சிந்து நதியோரம் மேற்கு பஞ்சாப் (தற்போதைய பாகிஸ்தான்)
- ரூபார் – சட்லெஜ் நதியோரம், பஞ்சாப்
- லோத்தல் – சட்லெஜ் நதியோரம், குஜராத்
- காலிபங்கன் – காகர் நதி தென் கரையோரம் இராஜஸ்தான்
- சாகுந்தாரோ – சரஸ்வதி நதியோரம், இராஜஸ்தான்
- தோல்வீரா – கபீர் மாவட்டம், குஜராத்
- கோட்டிஜி – சிந்து மாகாணம்
- பனவாலி – ஹரியானா
- சுர்கோட்டா – குஜராத்

## நிறைவுரை

சிந்துவெளிப் பகுதியில், தொல்லியலாளர்கள் பலர் ஆய்வு மேற்கொண்டிருந்த போதிலும் சர். ஜான் மார்ஷல் அவர்கள் மேற்கொண்ட அகழாய்வில்தான் இந்நாகரிகம் பற்றிய முழுமையான விவரங்கள் உலகிற்குத் தெரியவந்தன. இந்நாகரிகம் தமிழர்களின் நாகரிகமே என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் உணர முடிகிறது. தற்கால நகர அமைப்பிற்கு, இந்நாகரிகம் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது. நீச்சல்குளம், தானியக்களஞ்சியம்,

### உங்களுக்குத் தெரியுமா?

**லோத்தல்**

குஜராத்திலுள்ள அகமதாபாத் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின்போது S.R. ராவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இடம் '**லோத்தல்**' ஆகும். இவ்விடமானது சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்த துறைமுகமாகும். இது உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் மூலமாக எகிப்து, மெசபடோமியா உள்ளிட்ட நாடுகளுடன் வாணிபம் நடைபெற்று வந்தன.



Unit 2.indd 33 20-02-2020 17:03:03

பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றின் வாயிலாகச் சிந்துவெளி மக்கள் கட்டடக்கலையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும், இவர்கள் பலநாடுகளுடன் வாணிகத் தொடர்புகொண்டிருந்தமைபெருமைக்குரியதாகும். இவர்கள், இறந்த உடல்களை எவ்வாறு அடக்கம் செய்தார்கள் என்பதையும் சான்றுகளுடன் காண முடிகிறது.

## மதிப்பீடு

AB8RH3

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. சிந்துவெளி நாகரிகம் குறித்து அகழாய்வு மேற்கொண்ட தொல்லியலாளர்

   அ) டாக்டர். ஸ்மித் ஆ) சர். ஜான்மார்ஷல்

   இ) ஷில்டே ஈ) கே. எம். முன்ஷி

2. சிந்துவெளி மக்கள் தோல்நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்திய பொருள் ------

   அ) கட்டில் என்னும் மீனின் எலும்பு ஆ) மானின் எலும்பு

   இ) காண்டாமிருகத்தின் எலும்பு ஈ) குதிரையின் எலும்பு

3. கங்காதேவி எழுதிய நூலின் பெயர்

   அ) மதுராவிஜயம் ஆ) அர்த்தசாத்திரம் இ) சாகுந்தலம் ஈ) இண்டிகா

4. பொருத்துக

   அ) நீலக்கீல் – 1. ஹரப்பா

   ஆ) கட்டில் – 2. குதிரை

   இ) தானியக்களஞ்சியம் – 3. பசை

   ஈ) அறியாத விலங்கு – 4. மீன்எலும்பு

   அ) அ-3 ஆ-4 இ-1 ஈ-2 ஆ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1

   இ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1 ஈ) அ-1 ஆ-2 இ-4 ஈ-3

5. பின்வரும் கூற்றையும், அதன் காரணத்தையும் படித்து விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   **கூற்று** : ஹரப்பா மக்கள் அளக்கும் கருவியை அறிந்திருந்தனர்.

   **காரணம்** : அளவைக்குறிகள் இடப்பட்ட குச்சிகள் அங்குக் கிடைத்துள்ளன.

   அ) காரணம்சரி , கூற்றுதவறு ஆ) காரணம்தவறு, கூற்றுசரி

   இ) காரணம், கூற்று இரண்டும்சரி ஈ) காரணம், கூற்று இரண்டும்தவறு

6. பசுபதி என்றச் சொல்லில் இருந்து பெறப்படும் பொருள்

   அ) பெண்கடவுள் ஆ) யோகிகளின்கடவுள்

   இ) விலங்குகளின்கடவுள் ஈ) இயற்கைகடவுள்

7. பின்வரும் கூற்றுகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   1. சித்திர எழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டவை.
   2. சித்திர எழுத்துகள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டவை.

3. சித்திர எழுத்துகள் மேலிருந்து கீழாக எழுதப்பட்டவை.

4. சித்திர எழுத்துகள் கீழிருந்து மேலாக எழுதப்பட்டவை.

அ) 1ம், 3ம்சரி ஆ) 1ம், 2ம்சரி இ) 1ம், 4ம்சரி ஈ) 3ம், 4ம்சரி

8. சிந்துவெளி நாகரிகம் கண்டுப்பிடிக்கப்பட்ட ஆண்டு

அ) 1924 ஆ) 1930 இ) 1921 ஈ) 1923

9. சிந்துவெளி மக்கள் தரைவழிப் போக்குவரத்திற்கு பயன்படுத்திய விலங்கு

அ) பசு ஆ) குதிரை இ) யானை ஈ) எருது

10. சிந்துவெளி மக்கள் இம்மரத்தைப் முதன்மை தெய்வமாககருதி வழிபட்டனர் ----

அ) அரச மரம் ஆ) வேப்ப மரம் இ) வன்னி மரம் ஈ) ஆல மரம்

## குறுவினா

1. சிந்துவெளி மக்கள் திராவிடர்களாகத் தாம் இருக்க வேண்டுமென்று கருத்து தெரிவித்த அறிஞர்கள் யாவர்?
2. சிந்துவெளி மக்களின் தரைவழி வணிகம் எந்தெந்த நாடுகளுடன் நடைபெற்றது என்பதைக் கூறுக.
3. சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய செங்கல்லின் அளவீடு யாது?
4. சிந்துவெளி முத்திரைகளில் இடம்பெற்றுள்ள விலங்குகள் யாவை?
5. சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?
6. சிந்துவெளி மக்களின் அணிகலன்களைக் குறிப்பிடுக.

## சிறுவினா

1. சிந்துவெளி மக்களின் பொழுதுபோக்குகள் யாவை?

3. தாய்த் தெய்வவழிபாடு – குறிப்புவரைக.

4. தானியக் களஞ்சியம் – குறிப்புவரைக.

5. தமிழகத்தில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?

6. சிந்துவெளி மக்களின் வீட்டுவிலங்குகள் யாவை?

## நெடுவினா

1. சிந்துவெளி மக்களின் சமுதாய நிலையை விவரிக்க.
2. இந்தியப்பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை யாது?
3. சிந்துவெளி நாகரிகத்தின் அழிவிற்கான காரணங்களை விளக்குக.